[1973 நவம்பர் 30

கும்முடிப்பூண்டி—காஞ்சிபுரம் பேருந்து வழித்தடம்

*532 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டிக்கும் காஞ்சிபுரத்திற்கும் இடையே பெரிய பாளையம், வெங்கல், திருவள்ளூர் வழியே ஒரு பேருந்து விடுவதற் கான செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் தலைநகராக மாற்றப்பட்ட நேரத்திலேயே அறிஞர் அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே காஞ்சிபுரத்திற்கு ஒவ்வொரு இடத்திலிருந்தும் பேருந்துகள் விடக்கூடிய முயற்சி மேற் கொள்ளப்படும் என்ற உறுதியை அளித்தார்கள். இப்பொழுது கும்மிடிப்பூண்டியிலிருந்து வெங்கல் வழியாகச் சென்றால் கிட்டத் தட்ட 80 மைல் தூரம் இருக்கிறது. ஆகவே தனியாக பேருந்து விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எனக்குக் கிடைத்த தகவலின்படி சுண்ணாம்புகுளத்திலிருந்து காஞ்சிபுரத்திற்குப் போகின்ற பேருந்துகள்—மாண்புமிகு உறுப் பினர் கூறிய இடங்களின் வழியாகச் செல்லக்கூடிய பேருந்துகள்— இருப்பதாகவும் அதற்கே போதுமான வருவாய் இல்லை என்பதாக வும் எனக்குக் தகவல் கிடைத்திருக்கிறது.

சென்னை புறநகர் பேருந்து வழித்தடங்களை நீட்டித்தல்

*533 வினா—திரு கா. வேழவேந்தன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பெரியபாளையம் வரை செல்லும் வழித்தடம் எண் 132 பேருந்துகளை நெல்வாய் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?